# THE MORNING STAR.

**Vol. 59.** **Jaffna, Thursday 29th of Nov. 1899.** **No. 24**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

*RECEIPTS FOR THE MORNING STAR.*

| | | |
|---|---|---|
| Chundicully | Rev. G. Champion and Messrs. P. Scott, J. Parinpanayagam, Chelliah Leeching (99) | 5.00 |
| Chavagacherry | Rev. T. P. Hunt, and Mr. Meydeen (98) | 2.50 |
| Jaffna Town | Mr. W. Bryant (99) | 1.25 |
| Udupiddi | Messrs. Wm. Sinniah, Asseervatham. Vallipuram and the Notary | 5 00 |
| Straits Settlements | Mr. A. K. Saravanamuttu | 2.25 |
| India | C. H. Kathiravelupilly | 2.00 |
| Jaffna | Mr. S. Kandiah | 2 00 |
| Ratnapura | Mr. S. Chelliah | 2 00 |

OUR SUBSCRIBERS ! !
Please remit all dues &c, at once.

THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The S. S. Lady Havelock is appointed to sail from Jaffna for Colombo via Paumban on the evening of the following date :—
Dec. 5th 1899.

The Company's Steamer "Lady Havelock" is appointed to sail from Jaffna for Colombo via Pt. Pedro on noon of the following date :—

W. MATHER & SON, Agents

FOR SALE.

A pair of Gentleman's ear rings set with brilliants mounted in gold.

Apply to WM. MATHER & SON.
Jaffna.

**WATCHES !**

**WATCHES !!**

**WATCHES !!!**

Just received a large assortment. Price from Rs. 5 00 to Rs. 16.50.

To be had at the Store Department
Jaffna Commercial Corporation Limited.

NOTICE

Messrs. William Mather and Son beg to intimate to the public that in addition to the large and varied business they are doing, they have commenced to do general Auctioneering and Commission Agency business at the spacious building lately occupied by the Jaffna Post Office.

Articles of every description can be entrusted to them, in the shape of household furniture horses, carriages, and all personal effects including jewellery &c. &c. They also undertake to negotiate sales of lands.

They have also to inform the public that well and ready made furniture of almost every description will be on view for sale at their premises from the 1st of July and that orders for any other articles not in stock will be promptly and satisfactorily executed. They have secured the services of a number of skilful carpenters.

For all further particulars, apply to
William Mather and Son.

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED,

Bankers and Commission Agents

The Company opens current accounts with sums of not less than Rs. 100.00 and interest allowed at 2 per cent per annum on minimum monthly balances of Rs. 500 00 and upwards. Fixed deposits received for 3, 6 and 12 months and interest allowed at 3, 5 and 6 per cent per annum respectively.

Remittances both by Wire and Draft made to and from Colombo. Colombo Bankers–National Bank of India Ltd.

Cheques and foreign drafts and bills of exchange on the Colombo Banks cashed

For sale at the Store Department

Grey shirtings, mulls, Jacconettes, Chintz of different kinds, Umbrellas, Hosiery. Boots, Shoes and Harness Waterbury watches, Printing paper, Swans Fountain Pens &c. &c.

WILLIAM MATHER,
Managing Director.

FOR SALE.

A lady's bicycle 'the New Ormonde' second-hand but in good running order.

Apply at the Mission Bungalow
T. B. SCOTT.
Manippay.
Jaffna.

NOTICE.

Wanted from 1st January 1900 a school master for the Church of England Vedda Mission Vernacular mixed "A" School, Vallaichenai, Batticaloa must be an earnest Church worker. One with a knowledge of English prefered,

Salary to start with Rs. 12.50 per month, with Girls' Grant for needle work.

Apply to
Rev. C. HENRY,
Batticaloa.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1024.

In the matter of the estate of the late Kanapathippillai Valuppillai of Moolai deceased.
Chanmugam Kathiraveluppillai of Moolai Petitioner,
Vs.
1. Teywanaippillai wife of Chanmugam Kathiraveluppillai
2. Chwaminathar Katiraveluppillai, Railway time-keeper, Serendah, Selangore, his wife
3. Chivagamippillai, of Moolai
4. Ramanathar Kanapathippillai of do
5, Chittampalam Kovindar and his wife
6. Katirasapillai of do Respondents.

This matter of the Petition of Chnamugam Katiraveluppillai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Kanapathippillai Veluppillai coming on for disposal before C. E. Wilmot Esq., District Judge, on the 11th day of November 1899 in the presence of Mr. T. C. Changarappilla proctor on the part of the Petitioner and the Affidavit of the Petitioner dated the 8th day of November 1899 having been read it is declared that the Petitioner is the husband of one of the heirs of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the respondents or any other person shall on or before the 18th day of December 1899 show sufficient case to the satisfaction of this court to the contrary.

Signed this 11th day of Nov. 1899. | C. EARDLEY WILMOT, District Judge.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No 1026.

In the matter of the estate of the late Ramanather Velupillai of Maravanpulo Deceased
Velupillai Ramanather of Maravanpulo Petitioner.
Vs.
1. Chivakamipillai widow of Maravanpulo
2 Kanther Murukesoe and wife
3. Kulanthainachan of do Respondents.

This matter of the Petition of Veloepillai Ramanather of Maravanpulo praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Ramanather Veloepillai of Maravanpulo coming on for disposal before C. Eardley Wilmot Esquire, District Judge, on the 20th day of November 1899 in the presence of Mr Tambiah S. Cooke Proctor on the part of the Petitioner and the Affidavit of the Petitroner dated the 14th day of November 1899 having been read it is declared that the Petitioner is the son and one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the respondents or any other person shall on or before the 22nd day of December 1899 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 20th day of Nov. 1899. | C. EARDLEY WILMOT District Judge.

ORDER NISI

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction. | No. 1025.

In the matter of the Estate of the late Kathirkamer Tampipillai of Thavalai Iyattalai. Deceased.
Arumugam Kanther of Munthuvil. Petitioner.
1. Muruker Chupper and wife,
2. Thankamuttu of Thavalai, Iyattalai,
3. Muruker Kathiraser and wife, "
4. Theivanai of "
5. Saravanai Chupper of "
6. Saravanai Chellan of "
7. Velautar Vallipuram and wife "
8. Sivakamipillai of Kodikamam
9. Kanther Arumugam of Manthuvil. Respondents

This matter of the Petition of Arumugam Kanther of Munthuvil praying for letters of Administration to the estate of the abovenamed deceased Kathirkamer Tampipillai of Thavalai, Iyattalai, coming on for disposal before C. Eardley Wilmot Esq., District Judge, on the 20th day of Novemqer 1899 in the presence of Mr. Thambiah S. Cooke Proctor on the part of the Petitioner and the Affidavit of the Petitioner dated the 14th day of November 1899 having been read it is declared that the Petitioner is the next of kin of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondent or any other person shall on or before the 22nd day of December 1899 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 20th day of November, 1899 } C. Eardley Wilmot. District Judge.

## Local & General.

**Weather.** Two weeks of beautiful clear weather were followed on the 21st inst. by heavy showers of rain which, lasting over six or seven days, have given us sufficient moisture to last for another fortnight. The rainfall at Udupiddi for the 11 mos. has been 39 inches which is somewhat less than the average. *Crops.* The paddy plants thrived during the pleasant weather but in many localities the fields were getting dry when the timely rain came, and filled the fields and the tanks causing the farmers hearts to rejoice. A good crop now is practically assured provided the December rains do not fail us entirely which is not likely.

**Yatman United Mission.** Rev. C. H. Yatman of New York U. S. A. on his return from Australia will stop at Colombo and hold a mission in connection with the Y. M. C. A from Dec. 8th to 17th for the success of which all christians are asked to pray.

**Clerical Examination.** This examination was held for four days commencing from the 20th inst. and 45 candidates presented themselves for it at the Jaffna Kachcherri.

**Wedding.** Rev. Theodore A. Elmer, M.A., Professor in Jaffna College, is to be married to Miss Henrietta Horsley eldest daughter of Rev. and Mrs. H. Horsley C.M.S. of Nellore, tomorrow morning in the Nellore church. Our sincere congratulations.

**End of the world in the Eastern Province** A friend writes; "We had a great time at the End of the World; and at——they had a greater. I think a great many of our Christian people felt inclined to forgive their enemies in case of any difficulty, but there seemed no appreciable hurry to pay their debts."

**Tellippally Training School.** An examination for admitting boys into this school will take place in "Sanders Hall" Tellipally, on the 19th and 20th Dec. Candidates should have passed the 5th standard and be ready for examination in Scripture lessons as well as in the lesson prescribed by the Government for the 5th standard. As usual an admission fee of Rs. 1 will be charged

**Director of Pub. Ins.** The new Director of Public Instruction, Mr. S. M. Burrows, arrived in Colombo on the 20th inst. and assumed the duties of his position on the following day.

**Rev. Mr. Stockley.** Mr. Stockley pastor of the Cinnamon Garden Baptist church has finally resigned his position, and taken charge of a church in England.

**Rev. J. Chandler.** Mr. Chandler of the Am. Madura mission arrived in Colombo on the 18th inst. to meet his daughter, Miss Helen Chandler, who came out in S.S. Australien on the 20th in company with the two young ladies for Jaffna. Miss. Chandler belongs to the 3rd generation of missionaries who have labored in So. India. Father Chandler was for many years a honored member of the mission. His son Rev. J. Chandler has been out as a missionary for 25 years and now the grand-daughter has arrived to take up the work in the field where her parents and grandparents have labored so long and faithfully.

**Sports** On Sunday the 18th inst. a meeting of the Jaffna Gymkana club, was held in the "Jaffna Library" rooms. It has been arranged to have the next sports during the Christian holidays on or about the 27th Dec.

**Kaits.** Over thirty vessels, large and small, were in the channel on the 18th inst. It is indeed the safest harbour for ships during threatening weather. The new grain shed is nearing completion and Mr. Chinnappa of Moolai, the contractor, will hand over the building to the Government before the contract period which ends in December. Over 5000 head of cattle were landed at Kaits by the Indian traders a few weeks ago. These are taken to the Vanni and from there to the central and Western Provinces to be sold to butchers.

**An accident.** At a festival at Enuvil on the 20th inst. the only sky rocket that was fired turned into the crowd of worshippers and struck a man of about 30 years on his chest. Death was almost instantaneous and the police have charged three Nalava fellows before the Police Court for having caused death by a negligent act. Com

**Notary dismissed.** Kumarasar Vytialingam Notary Public of Jaffna has been dismissed by Govt. for misconduct in his professional duties.

**Ceylon relief fund for the Transvaal war.** A meeting was held on the 16th instant with a view to raise fund to help the disabled in the Transvaal war. It was held in the council chamber presided over by His Excellency the Lieutenant Governor. The meeting was a success and steps were taken at once to collect money.

Com

# உதயதாரகை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௫௯ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௲அ௱௯௰௯ம் ௵ கார்த்திகை ௴ ௩௰ ௨ வியாழக்கிழமை. [சங்கியை, ௨௪



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனி (லிமிற்றெட்)


"லேடிகவலக்" புகைக்கப்பல் பின்வரும்தேதிகளில யாழ்ப்பாணத்திலிருந்து பாம்பன் வழியாய் கொழும்புக்குப்போகவிருக்கின்றது.
1899 ௵ மார்கழி ௴ 5 ௨
" "

"லேடிகவலக்" புகைக்கப்பல்பின்வருந்தேதிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வழியாய் கொழும்புக்குப்போகவிருக்கின்றது. ௴ ௨
" "

W M MATHER, & SON. Agents.

### விளம்பரம்.

இதன்கீழ்க்கையொப்பமிட்டிருப்பவர்கள், முன்யாழ்ப்பாணத் தபாற்கந்தோராய்ப் பாவிக்கப்பட்டுவந்த வீட்டிலே, பிரசித்தஏலவிற்பனவுத்தொழில்நடப்பிக்க ஏற்பாடுசெய்திருக்கின்றனர் மேசை, கதிரை முதலிய வீட்டுத்தளபாடங்களும், குதிரைகள் வண்டிகளும், நகைகளும், வேறெவ்விதசாமான்களும் விற்பனவுசெய்யப்படும். விற்பனவுக்குரியசாமான்கள் வைத்திருப்போர் இவர்களிடமொப்புவித்தாற் கூடியளவு உயர்ந்தவிலைக்கு விற்றுக்கொடுப்பார்கள்.

மேலும், அலுமாரிசு, மேசை, கதிரை, கட்டில், கவுச்சிமுதலிய மரச்சாமான்கள் மலிவான விலைக்கு விற்கப்படும். கைவசமில்லாதசாமான்கள் இதற்கென்று ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும் தகுந்ததொழிலாளரைக்கொண்டு கூடியஅளவுசீக்கிரத்திற் செய்வித்துக்கொடுக்கப்படும்.

நிலங்கள், வீடுகள் விற்கவிரும்புவோர் இவர்களிடமொப்புவித்தால் ஏலத்திலாயினும் வேறுவகையாகவாயினும் தகுந்தவிலைக்குவிற்றுக்கொடுப்பார்கள்.

William Mather & Son.
Auctioneers & Commission, Agents.

## காய்ச்சலுக்கு

சுரசங்காரி என்னும் மருந்து சாப்பிட்டால் காய்ச்சல் மூன்றுநாளில் நீங்கும். திரும்பிவரமாட்டாது. மறியமாட்டாது. இரத்தத்தைக் கெடுக்கமாட்டாது. வாட்டன்டேவி மருந்துச்சாலையில்மாத்திரம் அகப்படும். வேறுஇடங்களில் இம்மருந்து விற்கஅதிகாரமில்லை. இம்மருந்தினுடைய நன்மையை எல்லாரும்அறிவர். ஒன்றரைரூபாவோடு காய்ச்சல் முற்றாய் மாறும்.

## FRESH SUPPLY.

புதியமருந்துகள் இப்போதுவந்திருக்கின்றன. விலைமலிவும் சுத்த மருந்துமாயிருத்தலால் எல்லாரும் வாட்டன்டேவி மருந்துச்சாலைக்குப் போங்கள். சகலவித இங்கிலிஷ்மருந்துகள் கிருஷ்ணுசியுடைய சிந்தூரங்கள் விசேஷமான தமிழ்மருந்துகள்எல்லாம் அகப்படும.

1-11-99. Ward. & Davy.

### பழமுத்திரை தேவை.

அமரிக்காவிலுள்ள ஓர் ஓய்வுநாட் பள்ளிக்கூடத்தாரின் பிரயோசனத்திற்காய்ப் பழைய முத்திரைகள் தேவையாயிருக்கின்றன. ஓய்வுநாட்பள்ளிக்கூட அபிவிர்த்திகருதும் நமது இஷ்டர் யாராவது, அவைகளை நமக்கு அனுப்பிவைப்பார்களாயின் அதிக தயவாயிருக்கும். இங்ஙனம்.

S. Abraham.

Methodist E. Mission
KuolaLumpoor St: Settlements.

### தெல்லிப்பழைப் போதனு வித்தியாசாலை.

இவ்வித்தியாசாலையிற் சேரவிரும்புவார்க்குரிய பிரவேசப்பரீட்சை மார்கழி ௴ 19ம், 20ம் திகதிகளில் நடத்தப்படும. பரீட்சைக்கு வர விரும்புவோர் 5 ம் தரத்திற் சித்திபெற்று 14 வயது நிறைவேறப்பெற்றவர்களாயிருத்தல்வேண்டும். அத்தரத்துக்குரிய பாடங்களோடு வேதவினுவிடை, பழைய புதிய ஏற்பாட்டுக்கதைகள், ஓய்வுநாட்பள்ளிக்கூடப்பாடங்களிலும் பரீட்சை நடத்தப்படும். பரீட்சைநாட்களின் செலவுக்காக ஒருரூபா பிரவேசப்பணமும், வயது, சித்தியெய்தியதரம், இடம், காலம் என்பவைகளைக்காட்டும் சாட்சிப்பத்திரமும் ஒவ்வொருமாணுக்கனுங் கொண்டுவரவேண்டும்,

Tellippalai. } E. P. Holton
22—11—99. } Principal.


# உதயதாரகை.

௲அ௱௯௰௯ம் ௵ கார்த்திகை ௴ ௩௰ ௨.

## அமீரும் அங்கிலோ ருஷியரும்.

### The Ameer and the Anglo-Russians.

மத்திய ஆசியாவிலே சுயாதீன தாத்தாரியென்னும் பெயருடனிருந்த தேசம்முழுவதையும் ருஷியர் படிப்படியாய்த் தமதாக்கிக்கொண்டனரென்பதும், அவர்கள் இந்தியாவுக்கு வருவதற்குத் தடையாய் இடையிலிருப்பது அமீர் அரசனுலாளப்படும் ஆபுகானிஸ்தன் தேசமேயென்பதும் பூமிசாஸ்திரமாணவரறிந்த விஷயம். தங்கள் இராச்சியத்தைத் தென்திசையாய்நீட்டி இந்தியாவோடு கொண்டாட்டஞ்செய்ய வசதிபண்ணுவதும், இந்துசமுத்திரத்தில் வெளிப்பட்டு வர்த்தகம்நடத்த வழிதிறப்பதுமே ருஷியரின் வாஞ்சையாயிருக்கின்றது. அப்துர் ராமன் என்னும் அமீர் அரசரின்நாடாகிய ஆபுகானிஸ்தான், அங்கிலோ ருஷியநாடுகளுக்கிடையிலிருப்பதால் இரு இராசாங்கத்தவர்களும் அமீர் அரசரைச் சினேகிதராக்கிக்கொள்ளத்தெண்டிக்கின்றனர். இதுவரையில் நடைபெற்ற உடன்படிக்கைகளின்படி அமீர் அரசர் தாம் அங்கிலேயர்பட்சத்திலிருப்பதாய் வாக்குப்பண்ணி அவர்களிடத்திலிருந்து உதவிப்பணமும்பெற்றுக்கொண்டு வருகின்றனர். ஆயினும் சிலநாட்களின்முன்னே ருஷியரின் தலைநகரியாகிய சம்பேதுருபுரியிலிருந்து வெளிப்பட்ட சில தந்திச்சமாசாரங்கள் சற்றே எழுப்புதலுக்குரியவைகளாயிருக்கின்றன. அமீர் அரசர்க்கு வர வரப் பைத்தியங்கூடுகிறதென்றும், அதினுலே அத்தேசத்திற் பலகுழப்படிகளுண்டாகப்போகின்றனவென்றும், ருஷியர் அங்கிலேயரின் நாடாகியஇந்தியாவைச் சருவாதுகாப்பதற்காய் அங்கிலேயரிடத்திலிருந்து அமீர் அரசர் சொற்பபணம்பெறுகின்றனராயினும், ருஷியர் பெருந்தொகையாய்க் கொடுத்தால் அவர்கள் பக்கஞ்சார ஆயத்தமாயிருக்கிருரென்றும் ஒரு தந்திகூற, பின்னொர்தந்தி, ருஷியர் ஆபுகானிஸ்தன்நாட்டெல்லைவரைக்கும் புகைவீதிநீட்டி, அதி அரணுள கோட்டைகள்கட்டி, சேனைகளோடு நூற்றுக்கணக்கான பீரங்கிகளையும்ஸ்தாபித்து, எந்தநிமிஷத்திலும் ஆபுகானிஸ்தான்நாட்டுள் இறங்குகிறதற்கர்யத்தமாயிருக்கிருர்களெனக்கூறுகின்றது. இவ்விரு தந்திச்சமாச்சாரங்களும் ருஷியரிடத்திலிருந்தே புறப்பட்டனவாகையால் முழுதும் நம்பிக்கைக்குரியனவல்ல. ருஷியர் இந்தியாவுக்குப் படையெடுத்துவர எண்ணுகிருர்களென்பது இருபது முப்பது வருடங்களாய்ப் பேசப்படுங்காரியம். வடக்கே இமயபர்வதத்தினுலும் வடமேற்கே சுலிமானுதியமலைகளாலும் மற்றப்பக்கங்களிற் சமுத்திரத்தினுலும் இயற்கையிலேயே அரண்படுத்தப்பட்டிருக்கும் இந்தியாவைப் பிடிப்பது இலகுவான காரியமன்று. பிரித்தானிய இராச்சியத்தின் சலாக்கியங்களை யனுபவிக்கும் இந்துக்கள், மற்றெந்த இராச்சியத்தவர்க்குமிடங்கொடுக்கவும்மாட்டார்கள் காரியகிருவாகங்களிப்படியிருக்க மேற்கூறிய தந்திகளின் சாரமென்ன? அங்கிலேயர் தென்ஆபிரிக்காவில் யுத்தத்துக்குரியவில்லங்கங்களிலேற்பட்டிருக்குமிந்நேரத்திலே அவர்களை வெருட்டி இன்னும் பணம்வாங்கவேண்டும் என மனமாருட்டக்காரராகியஅமீர்அரசரெண்ணியிருக்கலாம். அல்லது சீனராச்சியத்திலே கோறியாவையிட்டு யாப்பானியரோடு வாதுபண்ணிக்கொண்டிருக்கும் ருஷியர், அங்கிலேயர்அக்காரியத்திற் தலையிடாதபடி செய்வதற்காய்ப் பயமுறுத்தலாக இவ்விதசெய்திகளைப் பரப்புகின்றனராக்கும். அப்துர்ராமன் என்னும் அமீர் அரசர் பலமுறைகளில் அங்கிலேயரைவஞ்சித்து அனுப்பியிருக்கின்றனர். சிலநாட்களின்முன கபூல்நகரத்தில்நடைபெற்றகுரூரச்செயல்களும் கொலைகளும் அமீர் அரசர் மனமாருட்டமுள்ளவராயிருக்கிருரென்பதற்கத்தாட்சிகளாயிருக்கின்றன. அவருடைய மரணஞ் சீக்கிரத்தில் நடைபெறுமென்பதும், அந்நேரத்திலே ருஷியர் தேசத்துள்ளிறங்கி ஹீறத்து ஆதியபட்டினங்களைப் பிடிக்க எத்தனிப்பார்களென்பதும், அங்கிலேயர் தென்னுபிரிக்காவின விஷயத்திற்கவலையீனமாயிருந்ததுபோலத் தாமதமாயிராமல் முந்தியே ஆயத்தமாயிருத்தல்வேண்டுமென்பதும் இராசதந்திரமுணர்ந்தார் சிலரின் கருத்து.

## தென் ஆபிரிக்க யுத்தம்.

### War News.

லேடிசிமித், கிம்பளி, மாபெக்கிங் என்னும் பட்டினங்கள் இன்னும் போவர்களால் முற்றிகையிடப்பட்டனவாகவே யிருக்கின்றன. அவ்விடங்களிலுள்ள அங்கிலோசேனைகள் தற்காப்பிலிருக்கின்றனவேயன்றி முன்னேறித் தாமாய்ச் சண்டைசெய்யவில்லை. போவர்கள் இப்பட்டினங்களைச் சூழ்ந்துநின்று குண்டுமாரிபொழிகின்றனர். சில கட்டிடங்கள்மாத்திரம் நெருப்புப்பற்றியெரிந்துபோயின. போவர்கள் பட்டினத்துக்கு மிக அணித்தாய்ச்செல்லும்போதெல்லாம் அங்கிலோசேனுவீரர்வெளியேறிவந்து அவர்களோடுசண்டைசெய்து துரத்துகின்றனர்.

9 ந் திகதி லேடிசிமித் பட்டினத்துக்கருகில் ஜெனரல் உவைற் நடத்திய சண்டையிலே போவர்களில் 800 பேர்வரையில் மோசப்பட்டுப் பின்வாங்கியும் மறுபடியும் திரும்பிவந்து பட்டினத்தைச் சூழ்ந்துநின்றுகுண்டுசெலுத்துகின்றனர். சில போவர்கள் பின்னுந் தெற்கேவந்து இங்கிலிஷரால் விடப்பட்டிருந்த கொலென்சோவாதிய விடங்களைக் கைப்பற்றி புகைவீதிகள் தந்திக்கம்பிகளை அழிக்கின்றனர்.

கொலென்சோவுக்கும் நத்தாலின் தலைப்பட்டினமாகிய பீற்றர்மறிற்ஸ்பேக்குக்கு மிடையிலுள்ள எஸ்கோட் என்னுமிடத்திலிருந்து 15 ந் திகதி 180 அங்கிலோசேனுவீரர் பீரங்கிகளோடு யுத்தசந்நத்தராய்ப் புகைவண்டியிலேறிச்செல்ல, சீவெளியென்னு மிடத்திலே போவர்கள் அவர்களை வளைத்துச்சருவி புகைவண்டிகளை அவற்றின் தண்டவாளங்களை விட்டிழுத்துடைத்து சேனுவீரரிலும் 90 பேரைப்பிடித்துக்கொண்டனர். எஞ்சினேர் இயந்திரவண்டிலோடோடித் தப்பிவிட்டார்கள். மோணிங்போஸ்ற் என்னும் பத்திரிகையின் கடிதக்காரராய்ச் சென்றவரும் லோட் சேர்சிலினமகனுமாகிய உவின்ஸறன்சேர்ச்சிலும்காயப்பட்டோரையிரட்சித்தற்காய்த் திரும்பிப் போனவிடத்திற் பிடிக்கப்பட்டார்.

18 ந் திகதி எஸ்கோட்பட்டினத்தைப்பிடிக்கும்படி போவர்கள்பிரயாசப்பட்டும் அங்கிருந்த 2000 அங்கிலோசேனுவீரர் அவர்களை யெதிர்த்து யுத்தஞ்செய்து பின்வாங்கச்செய்தனர். அப்பட்டினத்துச் சேனை ஜெனரல் கில்யாட்டின்கீழாயிருக்கின்றது. சில போவர்கள் அப்பட்டினத்துக்குத்தெற்கேயுஞ்சென்று தந்திக்கம்பிகளை வெட்டிப்போட்டனர். ஆறுகளின்மேற்போடப்பட்டபுகைவீதிப்பாலங்களுமழிக்கப்பட்டன. ஆகவே யிப்போது தெற்கேயுள்ள தலைப்பட்டினத்துக்கும், வடக்கேயிருக்கும் எஸ்கோட், கொலென்சோ, லேடிசிமித் பட்டினங்களுக்குமிடையிற் புகைவீதிப்போக்குவரவாவது தந்திச்சமாசாரமாவதில்லை.

19 ந் திகதியும் ஜெனரல் உவைற் வெளியே வந்து போவர்களைத் துரக்கலைத்துச் சில யுத்தசாமான்களையுங் கைப்பற்றினர்.

ஜெனரல் உவைற்றுக்குதவிக்காகஅனுப்பப்பட்டசேனைகள் நத்தாலின் துறைமுகமாகிய டேர்பானிலிறங்கித் தலைநகரிற் தங்கி ஆயத்தங்கள்செய்து வடக்குமுகமாய்ச்செல்கின்றன. தொகைஏறக்குறைய 10,000. ஜெனரல் கிளேறியென்பவரே அவர்களை நடத்திச்செல்கின்றனர். ஆனுல் இச்சேனையை ஜெனரல் உவைற்றுேடுசேரவிடாது தடுத்துயுத்தஞ்செய்யும்படி போவர்களின்சேனுநாயகமாகிய ஜெனரல் யூபேட் 7000 பேருள்ள சேனையொன்றுதிரட்டிக்கொண்டு எஸ்கோட்பட்டினத்தையுங்கடந்துதெற்கேசெல்லுகின்றுர்.

22 ந் திகதி எஸ்கோட்டுக்குத்தெற்கேயுள்ள மூவைநதி ஸ்தானத்தைப் போவர்கள்சருவினபோது, அவ்விடத்தில் ஜெனரல், பாட்டனின்கீழாயிருந்த 2000 இங்கிலிஷ்வீரர் அவர்களைப் பின்காட்டச்செய்தனர்.

கிழக்கே நத்தாலிலுள்ள லேடிசிமித் பட்டினததில் நடைபெறும் வகையாகவே மேற்கே பெக்குவானுலான்டிலுள்ள கிம்பளிபட்டினத்தையும் போவர்கள் சூழ்ந்து குண்டுமாரிபொழிகின்றனர். பட்டினத்துக்குத் தண்ணீர்கொடுக்கும் ஆற்றையும் மறித்துத் திருப்பிவிட்டுவிட்டார்கள். இப்பட்டினத்தை மீட்கும்படி 10,000 பேரடங்கிய சேனை லோட் மெதுவென் என்னும் ஜெனரலின்கீழாய் வடக்குநோக்கித் தீவிரிக்கின்றது. ஜெனரல் உவாக்கரின்கீழாய் ஓர் சேனை இவர்களின் வழிகளைப் பாதுகாத்துக்கொண்டுநிற்கின்றது. இவர்களையுங் கிம்பளிபட்டினத்திலுள்ள சேனையோடுபோய்ச்சேராதபடி தடுத்துயுத்தஞ்செய்யும்படி, போவர்களின் இரண்டாம் ஜெனரலாகிய குரொன்ஜியெனபவர், பெல்மொன்ற், மொட்டர் என்னுமிடங்களிற் சேனைகள் அணிவகுத்துக்கொண்டு நிற்கின்றனர். போவர்கள் அழித்துவிட்ட பாலங்கள், தெருக்களைத் திரும்பச்செப்பனிட்டுக்கொண்டு போவதற்காய் இஞ்சினீர்மார் கட்டுவேலைகாரரும் அங்கிலோசேனையோடுகூடச்செல்கின்றனர்.

23 ந் திகதி லோட்மெதுவென், பெல்மொன்ற் என்னுமிடத்திலே போவர்சேனையைச் சந்தித்து ஒன்றின்பின்னென்ருய் மூன்று மலைகளைவிட்டுத்துரத்திப் பெரும்வெற்றியடைந்தனர். போவர்களில் அநேகர் மாள 50 பேர் கைதிகளாயினர் ஜேர்மன் உத்தியோகஸ்தருமொருவர் பிடிக்கப்பட்டார். அங்கிலேயரில் 53 பேர் மாள 146 பேர் காயப்பட்டனர். 21 பேரைக்காணவில்லை. ஜெனரல் பெதெஸ்தெனிகோவுக்கும் தோழில் வாருனகாயம்.

ஜெனரல் புல்லர் மேற்கூறியதுனைச்சேனைகளையனுப்பிவிட்டு நத்தாலுக்குச்சென்றிருக்கிருர். கேப்கலனியின் வடபாகத்திலுள்ள குவீன்ஸ்றவுனிலுள்ள சேனைகளை ஜெனரல் கற்றக்கர் அணிவகுக்கின்றுர். முன்னே நத்தாலிலிருந்தவராகிய ஜெனரல் பிரென்சு இப்போது கேப்கலனிக்கழைக்கப்பட்டு அதன் வடபாகத்திற் குதிரைப்பட்டாளத்தை நடத்துகின்றுர். யுத்தத்திற்கென்றுநியமிக்கப்பட்ட 70,000 சேனை முழுவதும் தென்னுபிரிக்காவிலிறங்கிவிட்டன. அவற்றில் ஏறக்குறைய 25,000 வரையில் நத்தாலில் ஜெனரல் கிளேறி, ஜெனரல் பாட்டன், கில்யாட், உவைற்என்பவர்களின் கீழாயும், எஞ்சியவைகள் 45,000 க்கு மேற்பட, மேற்கே கேப்கலனியினெல்லையில், ஜெனரல் கற்றக்கர், ஜெனரல் பிரென்சு, ஜெனரல் உவாக்கர், ஜெனரல் லோட் பெதுவென் ஆதியோர் கீழாயுமிருக்கின்றன.

இதுவரைக்குந் தற்காப்பில்நின்ற ஆங்கிலேயர் இனிமேற்ருன் முன்னேறி யெதிர்த்துச்சண்டைசெய்வர். லேடிசிமித், எஸ்கோட், கிம்பளி, மாபெக்கிங் என்னுமிடங்களிற் தங்களின் பிரயாசங்கள் வாயாததினுற் போவர்களொருவாறு மனமிளக்கரிக்கத்துவங்கிவிட்டனரென்றும். இனித்தங்களுடைய சொந்தப்பட்டினங்களைக் காப்பதற்குரிய யோசனை யவர்களிற் றொட்டுவிட்டதென்றுஞ் சமாசாரம்பிறக்கின்றது.

பிரசாதிபதி குறூகரிடத்திலிருந்து சில உத்தியோகஸ்தர் டெல்கோவாக்குடாவுக்கு வந்து கேப்றவுனுக்குப்போகின்றனர். அங்கிலேயரோடு சமாதானம்பேசப் புறப்பட்டிருக்கிருர்களென்று சத்தம். தீய யோசனையாயிருக்கலாம். கீழ்ப்படுவதன்றிச்சமாதானமேது

## ஒய்வுநாட்பள்ளிக்கூட ஊழியமும் நடத்தும் முறையும்.

Sunday School Work and Method
Apaper read by K. C. Kadirgamer Esq.

(91 ம் பக்கத் தொடர்பு.)

### 5. ஊழியத்தின் போதுவியல்.

இந்தக் காலக்கிரமத்தைத் தவருது முகாமைக்காரன் அநுசரிக்கவேண்டும். உபாத்திமார், மாணுக்கர், பாடங்கேட்பவர், பேசுகிறவர் இதைக் கைக்கொள்ளும்படி முகாமைக்காரன் செய்யவேண்டும்.

5. மூன்றுமாதத்துக்கொருமுறை எழுத்துச்சோதனை அவசியம்வைத்தல்வேண்டும். இதை முகாமைக்காரன், இலிகிதரும், உபாத்திமாரை வகுப்புமாற்றியும், நடத்துவர். சோதனைமுடிவு குறிக்கப்பட்டு வருடமுடிவில் கவனிக்கப்படும்.

6. கீதங்களும், செபமும், அதிகமாய் இருத்தல்வேண்டும். 5 கீதங்கள் சராசரியாய்ப் பாவிக்கவேண்டும். 3 கீதங்களும், 2 கீர்த்தனைகளும் பாவிக்கலாம். வீட்டில், ஆர்மோனியம், வீணை, தம்புரு பாவிக்கலாம். இதனுல் பிள்ளைகளைக் கவரவேண்டும். ஒருபாட்டு வகுப்பு ஒய்வுநாட்பள்ளிக்கூடச்சம்பந்தப்பட்டதாய் இருக்கவேண்டும். கீதவாத்தியங்கள் பாவிப்பவர்களும் உபாத்திமாராய்அல்லதுமாணுக்கராய்இருத்தல்உத்தமம்

7. கற்பலகைப்பாடம் முகாமைக்காரன் அல்லதுஇலிகிதர் விளக்கப்படுத்தவேண்டும். பாடங்கேட்பவர் கேள்விகளைச் சுட்டிப்பாய்க் கேட்கவேண்டும். முன்னே ஆயத்தம்பண்ணி எழுதிக்கேட்டல் உத்தமம். பேசுகிறவர் விஷயத்தைப் பிரித்து இலேசான பாஷையில், சரித்திரங்கள், உதாரணங்கள் ஏராளமாய்ச் சொல்லி பிள்ளைகளின் கவனத்தையும் வியப்பையும் கவர்ந்துகொள்ளவேண்டும். அவர்கள் நாள்வீதம் படிக்கும் விஷயங்களாகிய கணிதம், பூகோளம், அட்சரகணிதம், கேத்திரகணிதம், இலக்கணம், இயற்கைச்சாத்திரம், இவை முதலியவைகளிலிருந்து தேவனேஅத்தாட்சிப்படுத்திப் பொருத்திப் பேசவேண்டும். சுருக்கமான விளக்கமான பேச்சாய் இருக்கவேண்டும். எழுதிப்பேசுதல் உத்தமம். ஒவ்வொருகிழமையும் பேசும்பேச்சுக்களின் குறிப்பை முகாமைக்காரன் தன்னுடைய குறிப்புப்புத்தகத்தில் வைத்துக்கொள்வர். எழுதிவாசி வாழ்க்கை கழுதைவாழ்க்கையென்பதுஇதிலும் உண்மைதான்.

8. பிள்ளைகளுக்கு வருடத்துக்கு மூன்றுமுறை அல்லது இரண்டுமுறை உபாத்திமாரும், முகாமைக்காரன்இலிகிதரும் உண்டாட்டுக்களியாட்டுக்கொண்டாட்டங்கள்வைத்துச் சிற்றுண்டியருந்தச்செய்துகளிப்பிக்கவேண்டும். வருடாந்தச்சோதனைவைத்து முழுவருடஒட்டத்தையும்பேணிப்பரிசுகள்சேகரித்து, உபகாரக்கூட்டம்வைத்துச் சபையாரை அழைத்து அவர்களுக்கு ஊழியத்தைப்பற்றிய வரலாறுகளைச்சொல்லிஊழியத்தை யாவரும் விரும்பச்செய்து ஒய்வுநாட்பள்ளிக்கூடம் இருக்கிறது சீவிக்கிறது, வளருகிறதென்று யாவரும் அறியச்செய்தல்வேண்டும்.

9. உபாத்திமார் சனிக்கிழமைகளில் தங்கள் பாடங்களைப் போதகரிடம் அல்லது மிஷனரியிடம் ஒழுங்காய் ஆயத்தப்படுத்தல்வேண்டும். இது மிகவும் முக்கியமான ஒரு ஏற்பாடு.

10. ஒய்வுநாட்பள்ளிக்கூடநடாத்துகையில் ஒழுங்கு இருத்தல்வேண்டும். அநேகமாவது பிள்ளைகள் உபாத்திமார் சரிநேரத்துக்கு வருதல்வேண்டும். உடுப்புச்சுத்தம் சாதாரண உடம்புச்சுத்தம் அவசியம் கவனிக்கப்படவேண்டும். பாடும்பொழுதும்செபம்பண்ணும்பொழுதும் படிப்பிக்கப்படும்பொழுதும் கேள்விகேட்கும்பொழுதும் உபந்நியாசிக்கப்படும்பொழுதும் பிள்ளைகள் பிறிதொருவிஷயத்தில் கவனத்தை விடப்படாது. இதை முகாமைக்காரன் உபாத்திமார் அவ்வப்போதே கவனித்து, வகுப்பிலேனும்,மண்டபத்திலேனும் ஒரு ஆளைக்குறித்துச் சொல்லாமல் குற்றத்தைச்சொல்லி எச்சரித்துப்போடவேண்டும். பிள்ளைகளிலிருக்கும் பெரும்பாவம், ஒவ்வொரு அற்பகாரியத்துக்கும் இலேசாய்ச் சிரித்தல், பார்வை, பேச்சு, செய்கையாவையும் உபாத்திமார் முகாமைக்காரன் நுணுக்கமாய்க் கவனித்தல்வேண்டும். பிள்ளைகள் ஒழுங்காய்வருவதைத் தூண்டிவிடுதற்கு டிக்கற் கொடுத்து அதன்மேல் புத்தகம் வழங்குதல் மிகவும் நலமாயிருக்கும். அநுபவத்தாற்கண்டு இது சித்தியெனச்சொல்வோம். அந்தந்தக் கிழமைப் பாடங்களை திருட்டாந்தப்படுத்தும் படங்கள் வகுப்பிலே முதல் அரைமணித்தியாலநேரத்தில் காட்டலாம். பிள்ளைகள் எழும்புதல், இருத்தல், வகுப்புக்குச்செல்லல், வகுப்பால் வருதல், பட்டாள வரிசைபோல இருத்தல்வேண்டும்.

இன்னும்வரும்.

## காப்பிகுடிப்பது கண்ணுக்குக்கேடு.

ஓர் அங்கிலேயபத்திரிகையின் அபிப்பிராயம்.

(சுதேசமித்திரன்.)

